# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.12/2025

## அ.சா. 13 (LW 17 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.மாயன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | பெரிய கருப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **23.07.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4,6,7,9,10 எதிரிகள் ஆஜர். 5,8 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் பொன்மாந்துரையில் குடியிருந்து வருகிறேன். லாரி டிரைவராக வேலை செய்கிறேன். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 2023ம் ஆண்டு தான் பொன்மாந்துரையில் குடியிருந்து பலசரக்கு கடை வைத்திருந்ததாகவும், எங்கள் ஊரைச் சேர்ந்த இருளப்பன் என்ற ராசுவை எனக்கு நன்றாக தெரியும் என்றும் , அவருக்கு சொந்தமான வீட்டை விற்க முடியாமல் பிரச்சனையில் இருந்ததால் அந்த ஊரைச் சேர்ந்த லெட்சுமணன் மகன் ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி என்பவருடன் சேர்ந்து கடந்த 2 1/2 வருடத்திற்கு முன்பு வேறொரு நபருக்கு விற்று விட்டதாகவும் , அதற்கு புரோக்கர் கமிசனாக சண்முகவேலும், ஸ்ரீரங்கனும் ரூ.50 ஆயிரம் வரை வாங்கி கொண்டதாகவும் அச்சமயத்தில் வெளியூரிலிருந்து ஊருக்கு வந்த ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி இருளப்பன் என்ற ராசுவிடம் சண்முகவேலுக்கும், ஸ்ரீரங்கனுக்கு மட்டும் வீட்டை விற்று புரோக்கர் கமிசன் கொடுத்திருக்கிறாய், ஆகவே தனக்கும் புரோக்கம்கமிசன் கொடுக்க வேண்டும் என கேட்டதாகவும், இருளப்பன் என்ற ராசு தற்போது பணம் கையில் இல்லை என சொன்னதாகவும், அதனால் அவர்களுக்குள் பிரச்சனை

ஏற்பட்டதாகவும், பின்பு கடந்த 07.08.2023 அன்று பகல் 11.00 மணிக்கு புதுப்பட்டி தைலாயி அம்மன் கோவில் அருகில் தானும் எங்கள் ஊரைச் சேர்ந்த தீத்தானும் அந்தோணி செல்வகுமாரும் இருந்த போது அங்கு வந்த ஏற்கனவே தெரிந்த சண்முகவேல், ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ரஞ்சித்குமார், பூபதிராஜா, திவாகர், வினோத்குமார், சக்திவேல், கணேஷ்குமார், கார்த்தி, விக்னேஷ், பிரபு ஆகியோர் கூட்டமாக இருந்ததாகவும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என கேட்ட போது சண்முகவேல், ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, கணேஷ்குமார், விக்னேஷ் ஆகியோர்அங்கிருந்த மற்றவர்களிடம் இருளப்பன் என்ற ராசு தான் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் உன்னால் முடிந்ததைப் பார் என சொல்கிறான் என்றும் , இதனால் நம்மள கண்டால் பயமில்லாமல் போயிரும் என்றும் ஆகவே அவரை கொலை செய்ய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டியதாகவும் அதற்கு பிரபு, திவாகர், வினோத்குமார் கத்திகளை எடுத்து வருவதாக சொன்னதாகவும், அப்போது ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி மற்றவர்களை பார்த்து நீங்கள் இருளப்பன் என்ற ராசுவை கொலை செய்து விட்டு வாருங்கள், பெயில் எடுப்பதை நான் பார்த்துக் கொள்கிறேன் என கூறியதாகவும் இதனை கேட்ட நாங்கள் அங்கிருந்து பயந்து கிளம்பி விட்டதாகவும், அதன் பின்னர் 07.08.2023 அன்று மதியம் 03.00 மணிக்கு இருளப்பன் என்ற ராசுவை எதிரிகள் சதித்திட்டப்படி கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டதாக போலிசார்விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. .

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.</u>

<u>மறு விசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.23 19:20:33 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.